Written by
Sunday, 14 December 2008 15:57 -

□□□□□□□□□□தீ விரமடைந்தும் வருகிறது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் என்ற பெயரில், ஓட்டு மொத்த ஈழத் தமிழினத்தையும் அழித்தொழிக்கும் பயங்கரவாதப் போரை நடத்தி வருகிறது, சிங்கள பாசிச அரசு. சிங்கள அரசின் பாசிச இனவெறிக்கும், அந்த அரசு பயங்கரவாதப் போரதை் தீ விரப்படுத்தி வருவதற்கும் முக்கிய காரணம்,

இந்திய அரசு அதற்கு உறுதுணையாக நிற்கிறது என்பதுதான். இருப்பினும், தெற்காசியப் பிராந்திய வல்லரசான இந்தியாவின் மலோதிக்கத்தையும் சிங்கள இனவெறி அரசோடு கூட்டுச் சேர்ந்து ஈழத்தமிழர்களை ஒடுக்கும் இந்தியாவின் சதிச் செயலையும் எதிர்க்காமல், ஈழப் போரை நிறுத்தி, அமதை வழியில் தீர்வுகாணுமாறு இந்திய அரசிடமே கெஞ்சி கடேக்கும் அடையாளப் போராட்டங்களை நடத்துகின்றன, தமிழக ஓட்டுக்கட்சிகள். இவற்றின் பித்தலாட்டங்களை அம்பலப்படுத்தியும் ஈழத்தமிழருக்கு சிங்கள அரசு மட்டுமின்றி, இந்திய அரசும்தான் எதிரி என்பதை விளக்கியும், ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்தும் தமிழகமெங்கும் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு., ஆகிய புரட்சிகர அமைப்புகள் தொடர்பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன.

அண்மையில், மலகோனில் நடந்த கூண்டு வெடிப்புக்கு ஆர்.எஸ்.எஸ். கும்பலே காரணம் என்று நிரூபணமாகி, காவியுடை தரித்த இந்துவெறி பெணை் சன்னியாசி விசாரணைக்கு இழுத்துச் சலெல்லப்பட்டுள்ள நிலையில், இந்துவெறி பாசிச பயங்கரவாதிகளின் சூழ்ச்சிகள், சதிகள்,பயங்கரவாதப் படுகொலைகளை அம்பலப்படுத்தியும், இப்பார்ப்பன பயங்கரவாத கும்பலை வீழ்த்த அணிதிரளுமாறு உழைக்கும் மக்களை அறைகூவியும் இப்புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன.

19.10.08 அன்று கரோத்தகிரியில், நீலமலை அனைத்துத் தொழிலாளர் சங்கத்தினர், ""ஈழத்தமிழர் படுகொலைக்குத் துணைநிற்கும் இந்திய அரசை மாறியடிப்போம்! ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமைப்போரை ஆதரிப்போம்!" எனும் முழக்கத்துடன் செங்கொடி ஏந்தி, ஜீப் நிலையம் அருகே எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். இப்பகுதியில், ஈழத்தமிழர் படுகொலைக்கு எதிராக எந்த ஓட்டுக்கட்சியும் குரலெழுப்பாத நிலையில், உணர்ச்சி மலேிட நடந்த இந்த ஆர்ப்பாட்டம் பகுதிவாழ் மக்களிடம் பூதிய நம்பிக்கையை விதைத்தது. 13.11.08 அன்று அதிராம்பட்டினத்தில், ஈழத் தமிழர் படுகொலைக்குத் துணை நிற்கும் இந்திய அரசுக்கதெிராக வி.வி.மு; பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகளின் சார்பில் செங்கொடி ஏந்தி விண்ணதிரும் முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டம் நடந்தது.

Written by
Sunday, 14 December 2008 15:57 -

19.11.08 அன்று கிருஷ்ணகிரியில் பு.ஜ.தொ.மு; வி.வி.மு. ஆகிய அமைப்புகளின் சார்பில், சிங்கள இனவெறி அரசோடு கள்ளக்கூட்டுச் சேர்ந்து ஈழத்தமிழரை அழித்தொழிக்கும் இந்திய அரசையும், அதன் தெற்காசிய மேலோதிக்கத்தையும் சாடி, பகுதிவாழ் மக்களின் ஊக்கமான பங்கேற்போடு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கடலூர் மாவட்டம் நெய்வேலிக்குப்பத்தில், வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; ஆகிய அமைப்புகள் இணைந்து ஈழத்தமிழர் படுகொலைக்குத் துணைபோகும் இந்திய அரசசை் சாடியும், இந்துவெறி பாசிச பயங்கரவாதத்தை வீழ்த்த அறைகூவியும் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. பூதூச் சரேி மற்றும் விழுப்புரம் மாவட்டத்தசை் சேர்ந்த இப்புரட்சிகர அமைப்புகள், 22.11.08 அன்று கோட்டக்குப்பத்தில் இதே மூழக்கத்தின் கீழ் பொதுக்கூட்டத்தை நடத்தின. இப்பொதுக்கூட்டங்களும் ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சியும் ஆயிரக்கணக்கான உழைக்கும் மக்களின் நெஞ்சில் புரட்சிகர அரசியலபை் பதியவைத்தன.

பு.ஜ.செய்தியாளர்கள்